



# கருவிலே திருவுடையார்! இன்று கழகத்திற்கே பெருவுடையார்!



அமைச்சர்
**துரைமுருகன்**
கழகப்
பொதுச் செயலாளர்

“கருவிலே திருவுடையார்” என்பார்கள்
இந்தச் சொற்றொடர் யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ
தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பொருந்தும்!
அவர் கலைஞரின் உதிரத்தில் உருவானவர் அல்லவா!

குழந்தையாய் பிறப்பெடுத்த பின்
தாய் வழியில் பாலருந்தும் போது
இனமறியா மகிழ்ச்சியில்
ஒரு கை தாயின் கன்னத்தைத் தடவ
மறு கை சிறைச்சாலையின் இரும்புக் கம்பிகளுக்கிடையே
முடி வளர்ந்த முகத்தோடு
அந்தக் குழந்தையை முத்தமிடுவதற்கு
கம்பிகளிடையே முந்திக் கொண்டிருந்த
தந்தையின் முகத்தை வருடிக் கொண்டிருந்தது!

தளபதியின் இளமையே இயக்கத்திற்காகத் தியாகம் புரிந்தது!
சிறைக்கதவைத் தொட்டே வளர்ந்த
தியாக சொரூபி அல்லவா நம் தலைவர்!

**இளமையில் ஏடெடுத்து பள்ளிக்கூடம் சென்ற வேளையிலும்**
**கழகக் கொடி பிடித்து**
**வாழைக்கு கன்றாக இல்லாமல்**
**ஆலுக்கு விழுதாக இளைஞரணியை உருவாக்கிக் காட்டினார்!**
**கல்லூரிக் காளையாய் இருந்த போதே**
**கழகத்தின் பிரச்சார பீரங்கியாகி நாடெல்லாம் சுற்றி வந்தவர்!**
**கழகக் கொள்கைப் பிடிப்போடு நாடகம் நடத்தி**
**நாடெல்லாம் சுற்றிவந்ததை நாட்டிலுள்ள**
**ஏடெல்லாம் அன்று புகழ்ந்தன!**

**மாநகரத்து மேயராகி தருமமிகு**
**சென்னையை**
**வளங்கொண்ட நகராக மாற்றிக்**
**காட்டினார்!**
**சட்டமன்றத்தில் பல சவால்களை**
**எதிர்கொண்டவர்!**
**அரும்பு பிராயத்திலிருந்து ஆட்சிமன்றத்தில்**
**முதலமைச்சராக அமர்கிற வரையில்**
**அரசியலில் முறையாக வளர்ந்தவர்!**

தன் திறமையை வளர்த்துக் கொள்ள
ஏடு பல படித்தவர்;
நாடு பல கண்டவர்;
நல்லோர் வாழ்த்துக்களையெல்லாம் பெற்றவர்!
“இவரன்றி யார் வருவார் இவ்விடத்திற்கு?”
என்று நாடும் ஏடும் புகழ
கழகத்தின் தலைவராகி
தமிழ்நாட்டின் முதல்வராகப் பயணித்து வருகிறார்!

இளம் வயது சிந்தனையில் உதித்ததையெல்லாம்
நடைமுறையாக்கி வருகிறார்!
இப்பொழுது தான் சட்டம் ஒழுங்கு சரியான பாதையில்
சென்று கொண்டிருக்கிறது

அந்நிய நாட்டு முதலாளிகளெல்லாம்
‘நான் முந்தி! நீ முந்தி!’ என
தொழில் துவங்க வரிசையில் நிற்கிறார்கள்!
கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம்
பழுதில்லாமல் நிறைவேற்ற
இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்!

நாட்டில் அமைதி!
மக்கள் மனதில் மகிழ்ச்சி!
ஏழையின் இல்லங்களில் என்றுமில்லாத
குதூகலம்!

இதற்கிடையில், சோதனைகள்
விண்ணாலும், மண்ணாலும்,
மக்களாலும்
இடையிடையே வந்தாலும்
அவற்றையெல்லாம் தகர்த்தெறிய
தடுந்தோள் உண்டென்று வீரநடை போட்டு வருகிறார்!

நல்லாட்சிக்கு தொல்லை தர எத்தர்கள் சிலபேர் இங்கே!
அவர்களுக்கு எஜமானர்கள் பலபேர் டெல்லியில்!
அசைக்க முடியாது தளபதி ஆட்சியை
என்று தெரிந்த பின்னும்
தொட்டுப் பார்க்கலாம் என்று
மத்திய அரசே முனைந்து பார்க்கிறது!

**எதிர்ப்புகள் எட்டுத்திக்கிலும்**
**தீ நாக்கை நீட்டி வந்தாலும்**
**ராஜதந்திரம் என்ற காண்டீபம்**
**தளபதியின் கையில் இருக்கிறது!**
**தமிழ்நாடு அவர் பின்னால் நிற்கிறது!**

**இத்தனையையும் வென்று**
**தமிழ்நாட்டையும் கழகத்தையும் காப்பதற்கு**
**எல்லா வளமையையும்**
**என் தலைவர் கலைஞர்**
**தளபதிக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்!**
**தந்தை வாழ்ந்த ஆண்டுகளையும் தாண்டி**
**இவர் வாழும் போது நானும்**
**இவரை இன்று போல் என்றும் வாழ்த்த வேண்டும்!**
**கருவிலே திருவுடையார்!**
**இன்று கழகத்திற்கே பெருவுடையார்!**

# திராவிட மாடல் நீ! தேசத்தின் தேடல் நீ!



கவிப்பேரரசு
**வைரமுத்து**

என்றாள் மார்பை
இறுகப் பற்றும்
சிசுவைப் போல
உன் பிறந்தநாளைப்
பிடித்துக்கொள்கிறது
சமூகம்

சத்துணவே காரணம்

உனது அஸ்திவாரத்தை
அசைக்க முடியாது
எந்தச் சுனாமியும்

**ஐம்பதாண்டு அடித்தளத்தில்**
**எழுப்பப்பட்ட**
**கடைசிப் பெருந்தலைவன் நீதான்**

**உன்**
**திராவிட மாடல் இன்று**
**தேசத்தின் தேடல்**

நீ செல்லும் வழியெல்லாம்
காற்றில் பறக்கிறது
இருவண்ணக் கொடியும்;
எதிரிகளின் சாம்பலும்
நாளாக ஆக
நைந்துவிடுவாய் நீயென்று
நரிகள் நம்பின நீயோ!
வயதாக ஆக
மின்னுகிறாய்;
வைரமடித்த களமாய்

**செப்பியதெல்லாம்**
**செயலாகிவிட்டதால்**
**புதிய வாக்குறுதிகளைத்**
**தயாரிக்கிறது அறிவாலயம்**

வழக்கமாய்
உன் தேர்தல் அறிக்கையை
எட்டி எட்டிப் பார்க்கும்
ஏழை வர்க்கம்

இப்போதெல்லாம்
ஒன்றிய மாநிலங்களே
பார்க்கின்றன
உற்று உற்று

அடுத்தமுறை
நீ நினைவகம் சென்றால்
அதிசயம் காண்பாய்
அண்ணா எழுந்துவந்து
உன்னோடு கைகுலுக்குவார்
இருமொழிக் கொள்கையின்
இரும்புப் பிடிக்கு

உன்னை
நகர்த்த முடியாது

எதிரிகள்
உன் வீதியில் வீசிய
ஆணிகளையெல்லாம்
பொறுக்கித் திரிகிறார்கள்
ஒவ்வோர் ஆணியும்
அவரவர் வீட்டுச் சுவர்களில்
அறையப்படுகின்றன
ஒவ்வோர் ஆணியின் நுனியிலும்
உனது படம்

நடத்து சகோதரா!

**எந்த நிதி**
**வந்தால் என்ன?**
**எந்த நிதி**
**போனால் என்ன?**
**கையோடு எப்போதும்**
**கருணா‘நிதி’ இருக்கும்பொழுது**
**உதய‘நிதி’ ஜெயிக்கும்பொழுது**

